வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண் 3866 / அ4 / 2021 நாள் – 12–2021

பொருள் தேர்வுகள் – வேலூர் மாவட்டம் – 2021–2022ம் கல்விடியாண்டில் பள்ளிகளில் பயிலும் பத்தாம் வகுப்பு, இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கான முதல் மற்றும் இரண்டாம் திருப்புதல் தேர்வுகள் தொடர்பாக தேர்வுக்கால அட்டவணை மற்றும் பாடத்திட்டம் – பள்ளிகளுக்கு அனுப்புதல் சார்பு.

பார்வை சென்னை அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண் 02826 / எச் 1 / 2021 நாள் 28/12/2021

-----

பார்வையில் காணும் அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களின் கடிதத்திற்கிணங்க 2021 –2022ஆம் கல்வியாண்டில் பொதுத்தேர்விற்கு முன்னர் மாணவர்களின்அடைவுத்திறனை சோதிக்கும் வகையில் பத்தாம் வகுப்பு, மேல்நிலை இரண்டாம் ஆண்டு பயிலும் பள்ளி மாணவர்களுக்கு ஜனவரி மற்றும் மார்ச் மாதங்களில் முதல் மற்றும் இரண்டாம் திருப்புதல் தேர்வுகள் நடத்தப்படவுள்ளன. அதற்கான தேர்வுக்கால அட்டவணைகள் மற்றும் முதல் மற்றும் இரண்டாம் திருப்புதல் தேர்விற்கான பாடத்திட்டம் (குறைக்கப்பட்ட) இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது.

மேற்காண் விவரத்தினை அனைத்து பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் தங்கள் பள்ளி ஆசிரியர்கள் வாயிலாக அனைத்து மாணவர்கள் / பெற்றோர்கள் அறியும்வகையில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறும், மாணவர்களுக்கு உரிய பயிற்சிகள் அளித்து தேர்விற்கு தயார் நிலையில் இருக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இத்தேர்வுகள் நடத்துவது குறித்தான விரிவான வழிகாட்டுதல்கள் மற்றும் விவரங்கள் பின்னர் அனுப்பி வைக்கப்படும் என அரசுத் தேர்வுகள் இயக்ககத்திலிருந்து கடிதம் பெறப்பட்டுள்ளது.

(ஒப்பம்) க. முனுசாமி,
முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்

இணைப்பு : மேற்படி

பெறுநர்
அனைத்துவகை உயர் / மேல்நிலைப் பள்ளிதலைமை ஆசிரியர்கள்
மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள்

நகல்
மாவட்டக் கல்வி அலுவலர் வேலூர் அவர்களுக்கு தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கைக்காகவும் அனுப்பலாகிறது.